செய்தி வெளியீடு எண்–761 நாள்– 22.11.2007

# செய்தி வெளியீடு

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் காவல் துறை பணிகள் பற்றிய ஆய்வுக் கூட்டம் இன்று (22.11.2007) பிற்பகல் 4.30 மணியளவில் தலைமைச் செயலகத்தில் அமைச்சரவைக் கூட்ட அரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் அமைச்சர்கள் பேராசிரியர் க.அன்பழகன், திரு ஆர்க்காடு என்.வீராசாமி, திரு. வீரபாண்டி எஸ்.ஆறுமுகம், திரு கோ.சி.மணி, திரு.துரைமுருகன், திரு க.பொன்முடி, திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், திரு எ.வ.வேலு ஆகியோரும்;

தலைமைச்செயலாளர் திரு எல்.கே.திரிபாதி, உள்துறைச் செயலாளர் திருமதி எஸ்.மாலதி, நிதித்துறைச் செயலாளர் மற்றும் அரசுச் செயலாளர்கள் ஆகியோரும்; காவல்துறை தலைமை இயக்குநர் திரு பி.இராஜேந்திரன், காவல் துறை கூடுதல் இயக்குநர்கள், சென்னை மாநகர காவல்துறை ஆணையாளர், மண்டல இன்ஸ்பெக்டர் ஜெனரல்கள் மற்றும் காவல் துறை உயர் அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

விரிவான விவாதத்திற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பின்வரும் அறிவுரைகளை காவல் துறையினர்க்கு வழங்கியுள்ளார்கள் :

- கூலிப்படையினர் மற்றும் ரவுடிக் கும்பல்கள் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்களின் செயல்பாடுகளைத் தடுத்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- காவல் துறையினர் சிவில் சம்மந்தப்பட்ட பிரச்சினைகளில் தலையிடக் கூடாது.
- சமூக விரோதிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய வகையில் இரவு ரோந்துப் பணிகளை தீவிரப்படுத்த வேண்டும்.

- காவல் நிலையங்களில் விசாரணைக் கைதிகளின் மரணம் எந்தச் சூழ்நிலையிலும் நிகழாவண்ணம் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும்.
- புறநகர்ப் பகுதிகளில் கொள்ளை, களவு நிகழ்வுகள் ஏற்படாவண்ணம் காவல் துறையினர் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- சாலை விபத்துகளையும், உயிரிழப்புகளையும் தடுத்திட, போக்குவரத்து விதிமுறைகளை வாகன ஓட்டுநர்கள் கட்டாயம் கடைபிடிக்குமாறு காவல் துறையினரும், போக்குவரத்துத் துறையினரும் ஒருங்கிணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- சிறைச்சாலைகளில் கைதிகள் சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தடுக்க வேண்டும். கைதிகள் சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடத் துணை போகும் பணியாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*****

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.